Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.1, 2021, (69 - 83)

# கோறனிப் பெருந்தொற்று தொடர்பான முகநூல் பதிவுகளில் தொடர்பாடல் உத்திகள்

## Communication Strategies in COVID-19 Pandemic Related Facebook Posts

**Malarvizhi Sinayah**
Department of Malaysian Languages and Applied Linguistics
Faculty of Language and Linguistics, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia
malarvizhisinayah@um.edu.my

**Thanalachime Perumal**
Department of Malaysian Languages and Applied Linguistics
Faculty of Language and Linguistics, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia
thanalachime@um.edu.my

**Ponniamah M. Muniandy**
Sekolah Menengah Kebangsaan Sri Kota, Taiping, Perak, Malaysia
mponni@yahoo.com

**Thilagavathi Shanmuganathan**
Department of English Language
Faculty of Language and Linguistics, Universiti Malaya, Kuala Lumpur, Malaysia
thilasha@um.edu.my

**Kumanan N Govaichelvan**
Department of Information Systems, Faculty of Computer Science & Information Technology,
Universiti Malaya, Kuala Lumpur, Malaysia
selvakumanan@siswa.um.edu.my

**Published:** 26 June 2021

**To cite this article (APA):** Sinayah, M., Perumal, T., M Muniandy, P., Shanmuganathan, T., & N Govaichelvan, K. (2021). கோறனிப் பெருந்தொற்று தொடர்பான முகநூல் பதிவுகளில் தொடர்பாடல் உத்திகள். *Journal of Valartamil*, *2*(1), 69-83. https://doi.org/10.37134/jvt.vol2.1.6.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.1.6.2021

**ஆய்வுச்சாரம்**: சமூக வலைத்தளங்களில், மக்கள் எளிமையாகவும் விரைவாகவும் தகவல்களைப் பெற இயலும். எனவே, நாளிதழ், வானொலி, தொலைக்காட்சி போன்ற மரபுவழி ஊடகங்களைக் காட்டிலும் சமூக வலைத்தளங்களே இன்று பெரும்பாலான மக்களின் தேர்வாக அமைந்துள்ளன. நடமாட்டக் கட்டுப்பாட்டுக் காலத்தில் முகம் பார்த்து உரையாடும் வாய்ப்புக் குறைந்ததால், கோறனிப் பெருந்தொற்றின் ஆபத்தையும், மக்கள்

மேற்கொள்ள வேண்டிய தற்காப்பு நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களையும் வழங்குவதற்கும் மக்களைத் தொடர்புகொள்ளவும், அரசு அதிகாரிகள் பல்வேறு சமூக வலைத்தளங்களின் துணையையே நாடுகின்றனர். அவ்வகையில், இந்தக் கட்டுரை மலேசியாவில் சிறுபான்மையினராக வாழும் தமிழர்களின் சமுதாயத் தலைவர், சமூக ஊடகங்களின் துணையுடன் எத்தகைய விளைபயன்மிக்க தொடர்பாடல் உத்திகளைப் பயன்படுத்தி, இந்த இடர்காலத்தில் மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கினார் என்பதை ஆராய்ந்துள்ளது. டத்தோ ஸ்ரீ எம். சரவணனின் முகநூல் பக்கத்தில் அடையாளங்காணப்பட்ட 17 பதிவுகள், *Hyland-Wood, Gardner, Leask, Ecker (2021)* ஆகியோர் பரிந்துரைத்த பத்துத் தொடர்பாடல் உத்திகளின் அடிப்படையில் பகுத்தாயப்பட்டன. சரவணனின் முகநூல் பக்கத்தில், கோறனி தொடர்பான தமிழ்ப் பதிவுகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் ஒவ்வொரு பதிவிலும் பல்வகை தொடர்பாடல் உத்திகள் கையாளப்பட்டிருந்தன.

**கருச்சொற்கள்**: கோறனி, தொடர்பாடல் உத்திகள், பெருந்தொற்று, முகநூல் பதிவுகள், விளைபயன்மிக்க தொடர்பாடல்

**Abstract:** People obtain information easily and quickly in social media. Therefore, social media is the preferred media rather than conventional media, such as newspapers, radio, and television. As face-to-face communications are restricted during Movement Control Order (MCO), Government officials has used various social media platforms to communicate and convey messages related to pandemic risks and prevention actions to be taken. As such, this article examines how a community leader of minority Tamils in Malaysia, used social media, with effective communication strategies to provide needed information during the crisis. Based on the Hyland-Wood et al. (2021) communication strategies, 17 posts identified in Datuk Seri M. Saravanan's Facebook page were analysed. Despite the small number of Tamil posts related to the COVID-19 pandemic on Saravanan's Facebook page, findings show various communication strategies were employed in each post.

**Keywords**: COVID-19, communication strategies, effective communication, Facebook posts, pandemic.

## முன்னுரை

மலேசியாவில் முதல் கோறனி நேர்வு, 2020 ஆம் ஆண்டு ஜனவரி 25இல் அடையாளம் காணப்பட்டது. சிங்கப்பூரில் நோய் தொற்றுக் கண்ட ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த மூன்று சீன குடிமக்களால் இந்நோய் மலேசியாவுக்குள் பரவியது *(Elengoe, 2020)*. இந்நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மலேசியாவில் முதல் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை 2020ஆம் ஆண்டு மார்ச் 18இல் பிறப்பிக்கப்பட்டது. இதனால், மக்கள் தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொள்ளும் சூழலுக்குத் தள்ளப்பட்டனர். இச்சூழலில் இந்நோய் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கும் அரசாங்கத்தின் தொடர் நடவடிக்கைகளையும் ஆணைகளையும் அறிந்து கொள்வதற்கும் மக்கள் தகவல்

தொடர்பு ஊடகங்களையே நம்பியிருந்தனர். தொடர்பாடல் காலத்திற்கேற்ற ஊடகத்தில் தொடரும் *(Subramani, 2013)* என்பதால், இன்றைய முதன்மை தொடர்பாடல் ஊடகமாகச் சமூக வலைத்தளங்கள் விளங்குகின்றன.

தொற்றுநோய்களையும், விரைவாக மாறிவரும் சமூக, பொருளாதாரச் சூழல்களையும் நிருவகிப்பதற்கு விளைபயன்மிக்க தொடர்பாடல் உத்தியும் சிறந்த தலைமைத்துவமும் முக்கியப் பங்காற்றுகின்றன *(Hyland-Wood et al., 2021).* அத்தோடு பல்லின பல்வகை பண்பாட்டுச் சூழலில் வாழும் அனைத்து இனத்தவருக்கும், ஒரு நாட்டின் அரசுக் கொள்கைகளையும், இன்றைய சூழலில் தொற்றுநோய் தொடர்பான தகவல்களையும் வழங்குவது அவசியம். மேலும், கோறனிப் பெருந்தொற்றுப் பரவுகின்ற இந்த நெருக்கடியான காலத்தில், சமுதாயத் தலைவர்கள் மக்களை அணுகுவது மிகவும் முக்கியம். இடர்காலத் தொடர்பாடலின் முக்கியக் கூறான தலைவர்களின் சமூகத்துடனான ஈடுபாடும் வெளிப்படையான தொடர்பாடலும், சவால்களை எதிர்கொள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வகையில் இக்கட்டுரை, மலேசியாவில் குறிப்பாகச் சிறுபான்மையினராக வாழும் தமிழர்களின் சமுதாயத் தலைவர், சமூக ஊடகங்களின் துணையுடன் எத்தகைய விளைபயன்மிக்க தொடர்பாடல் உத்திகளைப் பயன்படுத்தி இந்த இடர்காலத்தில் மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கினார் என்பதை ஆராய்கிறது.

## ஆய்வுச் சிக்கல்

பல்லினச் சூழலில் நிகழக்கூடிய மொழித் தடைகளைக் களைய, வழங்கவேண்டிய அடிப்படைத் தகவல்களைப் பல்வேறு மொழிகளில் சரியான நேரத்தில் மொழிபெயர்த்தல் என்பது விளைபயனுள்ள இடர்காலத் தொடர்பாடலுக்குத் *(effective crisis communication)* துணைசெய்யும் *(Moses, 2015; Stayner, 2020).* அரசாங்க அதிகாரிகள் பல்லின மக்களின் அல்லது பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்க்கைச் சூழல், தேவைகள், ஆற்றல்கள், திறன்கள் போன்றவற்றைப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம். எனவே, அரசு அதிகாரியாகச் செயல்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இன்றைய நெருக்கடியான சூழலில் மக்களின் கவனத்தைப் பெற்றுத் தகவல்களைப் பரப்ப எத்தகைய தொடர்பாடல் உத்தியைப் பயன்படுத்துகின்றனர் என்று அறிவது அவசியம்.

## ஆய்வின் நோக்கம்

இந்தக் கட்டுரை தமிழை முதன்மொழியாகப் பயன்படுத்தும், சிறுபான்மை சமூகமாக வாழும் மலேசியத் தமிழர்களை மையமாகக் கொண்டு படைக்கப்படுகிறது. எனவே, இன்றைய சூழலில், நாடாளுமன்றத்தில் மலேசிய இந்தியர்களின் ஒரே பிரதிநிதியாகப் பதவியேற்று இருக்கும் சமுதாயத் தலைவர், தாப்பா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரும், தற்போதைய மனிதவள அமைச்சர் டத்தோ ஸ்ரீ எம். சரவணன், தம் முகநூல் பக்கத்தில் தமிழ்மொழியில் பதிவேற்றியுள்ள கோறனித் தொற்றுத் தொடர்பான பதிவுகளில் வெளிப்படும் தொடர்பாடல் உத்திகளை இக்கட்டுரை ஆராய்கிறது. எனவே, இக்கட்டுரை பின்வரும் இரண்டு நோக்கங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது.

(i) பெருந்தொற்றுக் காலத்தில் பதிவேற்றப்பட்ட சரவணனின் முகநூல் பதிவுகளில் இடம்பெற்றுள்ள தொடர்பாடல் உத்திகளை அடையாளம் காணுதல்.
(ii) இடர்காலத்தில் சமுதாயத்துக்குத் தகவல்கள் வழங்க சரவணன் கையாண்ட உத்திகளை விவரித்தல்.

## ஆய்வுமுறைமை

*Datuk Seri M Saravanan* என்ற பெயரில் அமைந்த முகநூல் பக்கமே *(https://www.facebook.com/datuksaravanan)* இந்த ஆய்வுக்குரிய தரவு மூலமாகும். இப்பக்கமே சரவணனின் அதிகாரப்பூர்வப் பக்கமாகவும் அதிகமானவர்களால் தொடரப்படும் (13.06.2021 வரை 61,827பேர்) பக்கமாகவும் உள்ளது. இப்பக்கத்தின் காலக்கோட்டில் (timeline), டத்தோ ஸ்ரீ எம். சரவணன், மனிதவள அமைச்சர், பேரா, தாப்பா நாடாளுமன்ற உறுப்பினர், ம.இ.கா தேசியத் துணைத்தலைவர் என்று மலாய்மொழியில் எழுதப்பட்டிருந்தது.

2018ஆம் ஆண்டு நவம்பர் 5ஆம் நாளிலிருந்து 2020ஆம் ஆண்டு மார்ச்சு 25 வரை, இப்பக்கத்தில் எந்தப் பதிவுகளும் இடம்பெறவில்லை. 2020ஆம் ஆண்டு மார்ச்சு 25-இல், சரவணன் மனிதவள அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர்தான், இப்பக்கத்தில் பதிவிடுவதைத் தொடர்ந்துள்ளார். 2020ஆம் ஆண்டு மே 11க்குப் பிறகு கோறனி தொடர்பான தமிழ்ப்பதிவுகள் இடம்பெறவில்லை. எனவே, மேற்சொன்ன காலக்கட்டத்தில் சரவணனின் முகநூல் பக்கத்தில் அடையாளங்காணப்பட்ட 17 பதிவுகள் தாம் இந்தக் கட்டுரையின் தரவுகளாகும். இப்பதிவுகள் அனைத்தும் பொதுப் பார்வைக்குரியன என்பதால், பதிவிட்டவரின் அனுமதியைப் பெறவேண்டிய தேவை ஏற்படவில்லை *(Franz et al., 2019)*. தேர்ந்தெடுத்த பதினேழு பதிவுகளும் *Hyland-Wood et al. (2021)* பரிந்துரைத்த பத்து தொடர்பாடல் உத்திகளின் அடிப்படையில் பகுத்தாயப்பட்டன. ஆய்வு முடிவுகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்த, சமுதாய மொழியியல் வல்லுநர் பேராசிரியர் பரமசிவம் அவர்களால் பகுப்பாய்வுச் சட்டகமும் ஆய்வின் கருத்துரைகளும் சரிபார்க்கப்பட்டன. பகுப்பாய்விற்காக, இந்த ஆய்வின் தரவுகள் பதிவு 1 (ப 1) முதல் பதிவு 17 (ப 17) எனவும், *Hyland-Wood et al. (2021)* பரிந்துரைத்த தொடர்பாடல் உத்திகள், உத்தி 1 (உ 1) முதல் உத்தி 10 (உ 10) எனவும் குறியிடப்பட்டன.

## Hyland-Wood et al. (2021) பரிந்துரைத்துள்ள பத்துத் தொடர்பாடல் உத்திகள்

மக்களின் நம்பிக்கையைப் பெறுவதில் வெளிப்படைத் தன்மையும் மக்களுடனான ஈடுபாடும் மிக முக்கியம். இதனை வலியுறுத்தும் *Hyland-Wood et al. (2021)*-இன் பத்து தொடர்பாடல் உத்திகளின் சாரத்தை இங்கே காணலாம்.

(i) **தெளிவாகத் தொடர்பு கொள்ளுதல்**:

என்ன செய்ய வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்பது குறித்த துல்லிய தகவல்களை வழங்குதல்; அறிதிறன் செயல்முறை *)cognitive processing* முயற்சியை இலகுவாக்க தெளிவான கட்டளைகள் உதவும்சீரற்ற . தகவல்களைத் தவிர்த்தல்நம்பிக்கையை மேம்படுத்த தவறாமல் . தொடர்பில் இருத்தல்

.

(ii) **அதிகபட்ச நம்பிக்கையைப் பெற முயலுதல்**:

மருத்துவ, பொது சுகாதார நிபுணர்கள் போன்ற நம்பகமான அதிகாரப்பூர்வ இடைத்தரகர்களின் உதவியுடன் அரசாங்கச் சுகாதார வலைத்தளங்களில் முக்கியத் தகவல்களை வழங்குதல்.

(iii) **பரிவுடன் தொடர்பு கொள்ளுதல்**:
சமூகத்தின் தேவைகளையும் கவலைகளையும் கேட்டு, உண்மையான பரிவையும் அக்கறையையும் வெளிப்படுத்துதல். பரிவையோ உணர்ச்சியையோ வெளிப்படுத்தத் தயங்காமை; முனைமுகப் பணியாளர்களைப் பாராட்டுதல்; நேர்மறையான நடத்தையை ஊக்குவித்தல்

(iv) **வெளிப்படையாகவும் நேர்மையுடனும் தொடர்பு கொள்ளுதல்**:
எடுக்கப்பட்ட முடிவுகளுக்கான காரணங்களை விளக்குதல்மக்கள் . பெறவும் (நேர்மறையும் எதிர்மறையும்) துல்லியமான தகவல்களைப் .முழுமையற்ற தகவல்களானாலும் முன்கூட்டியே தெரிவித்தல்

(v) **தவிர்க்க இயலாத நிலையற்ற தன்மையை ஏற்றல்**:
இயன்ற பொழுது நிலைத்தன்மையை உரைத்தல், மக்கள் செயல்முறை அடிப்படையிலும் மன ரீதியாகவும் எதிர்காலத்துக்குத்குறுகிய காலமு) ம் நீண்ட காலமும்( தயாராக உதவுதல்புதிய சான்றுகள் கிடைத்தவுடன் . இற்றைப்படுத்துதல், நிலையற்ற தன்மையை ஒப்புக்கொள்ளுதல்.

(vi) **உடல்நலம் குறித்த எண்ணெழுத்தறிவு அளவின் அடிப்படையில் விளக்கமளித்தல்**:
தலைவர்கள்: மக்களிடையே உள்ள எண்ணெழுத்தறிவு அளவின் வேறுபாடுகளை எண்ணிப் பார்த்தல்.
மக்கள்: பெற்ற தகவல்களை அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தி முடிவு எடுத்தல், ஆபத்தைப் புரிந்துகொள்ளும் திறன்பெற்றிருத்தல்.

(vii) **மக்கள் செயல்பட அதிகாரம் அளித்தல்**:
நடத்தையிலும் செயலிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் துணைசெய்யும் பொருத்தமான நடவடிக்கைகளைத் தொடர்பாடலில் இணைத்தல்.

தடைகளை எண்ணிப் பார்த்தல். உறுதியளிக்கும் வகையில் தகவல்களைக் கட்டமைத்தல். இக்கட்டமைப்பு நிறுவனத்தை ஆதரிப்பதோடு கட்டளைகளைப் பெற்றுத் துலங்காதிருக்கும் மந்தமானவர்களுக்கு முரணாக மக்களைச் செயல்படத் தூண்டி அவர்களை முடுக்குதல். ஒன்றுபட்ட ஆற்றலை இயக்குதல் / மக்களுக்கு அதிகாரம் அளித்தல்.

(viii) **சமுதாய வழமையை வேண்டுதல்**:
குழு உணர்வை ஏற்படுத்துதல், ஒற்றுமையை வளர்த்தல், பொறுப்பேற்க சமூக வழமைக்கேற்ற தகவல்களை ஒழுங்கமைத்தல், நோய்க் கடத்தி ஆவதைத் தவிர்த்தல். ஒரே வழமையின் அடிப்படையில், அவ்வழமையில் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளாதவர்களை அந்நியப்படுத்தாமல், மற்றவர்கள் மீது பொறுப்புகொள்ளும் உணர்வை ஏற்படுத்துதல். இலக்காகக்கொண்ட 'சமூக வழமை' உத்திகளை மேம்படுத்த, மக்களுடன் நெருக்கமான ஈடுபாடு கொள்வதன் தேவை. பொது உடல்நலத் தகவல்கள் பரப்புவதைச் சமப்படுத்த பல்வேறு சமூகங்களுடன் ஈடுபடுத்திக்கொள்ளல்.

(ix) **மாறுபட்ட சமூகத் தேவைகளை எண்ணிப் பார்த்தல்**:
பல்வேறு வழிகளில் அணுகக்கூடிய தகவல்களைக் குறித்த நேரத்தில் தவறாமல் வழங்குவதோடு இடர்களையும் நிருவகித்தல். மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புகள் கிடைக்கச் செய்தல். ஆன்மீக நம்பிக்கைகள், சமய வழக்கங்கள், பண்பாட்டு வழமைகள் ஆகியன சார்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் தடுப்பு உத்திகள்.

(x) **போலித் தகவல்களை முறியடிக்க முன்முனைப்புடன்** *(proactive)* **செயல்படுதல்**:
உண்மையான நடப்புத் தகவல்களை வெளிப்படையாக வழங்குவது, தொடர் பாதிப்பை ஏற்படுத்தும் போலித் தகவல்களையும் சதித் திட்டங்களையும் முறியடிக்கும். சமூக ஊடகங்களில் தகவல்களைப் பகிர்வதற்கு முன், இணையத் தகவல்களின் துல்லியம் பற்றியும் தகவல் மூலங்களின் நம்பகத்தன்மையை ஆராய்வது பற்றியும் கவனமாகச் சிந்திக்க மக்களுக்கு நினைவூட்டுதல்.

## தரவுகளின் பகுப்பாய்வும் கருத்துரைகளும்

விளைபயனுள்ள தொடர்பாடல் என்பது ஊடாடுதலும் *(interactive)* சமூகத்துடன் தொடர்ந்து உறவாடுதலும் ஆகும் *(Aruma, 2018).* பெருந்தொற்று, எதிர்நோக்கும் இடரின் தன்மைகள், இடர் களைய அரசாங்கத்தின் ஏற்பாடுகள் என்பன தொடர்பான தகவல்களைப் பரப்புதலும் விளைபயனுள்ள தொடர்பாடலில் அடங்கும். எனவே, மக்களின் நம்பிக்கையைப் பெற, தொற்றுநோய் பற்றிய தகவல்கள், நோயைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள், நலம் பெறும் முறைகள் தொடர்பான தகவல்களைத் தலைவர்கள், மக்களுக்கு வெளிப்படையாக வழங்க வேண்டும்.

## சரவணனின் முகநூல் பதிவுகளில் காணப்படும் தொடர்பாடல் உத்திகள்

*Hyland-Wood et al. (2021)* பரிந்துரைத்துள்ள பத்துத் தொடர்பாடல் உத்திகளுள் எட்டு உத்திகள் சரவணனின் முகநூல் பதிவுகளில் அடையாளங்காணப்பட்டன. அனைத்துப் பதிவுகளிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட உத்திகள் இடம்பெற்றிருந்தன. கூடிய எண்ணிக்கையாக ஏழு உத்திகளும் (ப5) குறைந்த எண்ணிக்கையாக இரண்டு உத்திகளும் (ப8, ப17) ஒரே இடுகையில் இடம்பெற்றிருந்தன. சரவணனின் முகநூல் பதிவுகளில் இடம்பெற்றுள்ள தொடர்பாடல் உத்திகளின் பயன்பாட்டையும் எண்ணிக்கையையும் அட்டவணை 1இல் காணலாம்.

**அட்டவணை** 1: சரவணனின் பதிவுகளில் காணப்படும் தொடர்பாடல் உத்திகள்

| முகநூல் பதிவுகள் / தொடர்பாடல் உத்திகள் | ப 1 | ப 2 | ப 3 | ப 4 | ப 5 | ப 6 | ப 7 | ப 8 | ப 9 | ப 10 | ப 11 | ப 12 | ப 13 | ப 14 | ப 15 | ப 16 | ப 17 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ1 | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | | 12 |
| உ2 | | | | | | | | | | | | | | | | | | 0 |
| உ3 | | ✓ | | | ✓ | | ✓ | | | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | 9 |
| உ4 | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | | | | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | 12 |

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ5 | ✓ | | | | | | | | ✓ | | | ✓ | ✓ | | ✓ | | | 5 |
| உ6 | | | ✓ | ✓ | ✓ | ✓ | | | ✓ | | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | | 10 |
| உ7 | ✓ | ✓ | | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | | | ✓ | ✓ | ✓ | | 10 |
| உ8 | ✓ | | | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | ✓ | ✓ | ✓ | | ✓ | | 12 |
| உ9 | | | | ✓ | ✓ | | ✓ | | | ✓ | | | | | | | | 4 |
| உ10 | | | | | | | | | | | | | | | | | | 0 |
| **மொத்தம்** | 4 | 4 | 3 | 5 | 7 | 5 | 5 | 2 | 3 | 3 | 4 | 6 | 6 | 3 | 6 | 5 | 2 | |

பகுத்தாய்ந்த தரவுகளின் அடிப்படையில், *Hyland-Wood et al. (2021)* பரிந்துரைத்த தொடர்பாடல் உத்திகளுள், (i) தெளிவாகத் தொடர்பு கொள்ளுதல் (உ1), (ii) வெளிப்படையாகவும் நேர்மையுடனும் தொடர்பு கொள்ளுதல் (உ4), (iii) சமுதாய வழமையை வேண்டுதல் (உ8) எனும் மூன்று உத்திகள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மூன்று உத்திகளும் அடையாளங்கண்ட 17 பதிவுகளுள் 12 பதிவுகளில் இடம்பெற்றிருந்தன. இரண்டாவது நிலையில் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட உத்திகள், உடல்நல எண்ணெழுத்தறிவு அளவின் அடிப்படையில் விளக்கமளித்தல் (உ6), மக்கள் செயல்பட அதிகாரம் அளித்தல் (உ7) என்பனவாகும். இவை தலா 10 பதிவுகளில் அடையாளங் காணப்பட்டன. இவற்றைத் தவிர்த்து பிற உத்திகளான பரிவுடன் தொடர்பு கொள்ளுதல் (உ3), தவிர்க்க இயலாத நிலையற்ற தன்மையை ஏற்றல் (உ5) மாறுபட்ட சமூகத் தேவைகளை எண்ணிப் பார்த்தல் (உ9) எனும் உத்திகள் முறையே 9, 5, 4 எனும் எண்ணிக்கையில் குறைவாகவே கையாளப்பட்டுள்ளன. அதிகபட்ச நம்பிக்கையைப் பெற முயலுதல் (உ2), போலித் தகவல்களை முறியடிக்க முன்முனைப்புடன் செயல்படுதல் (உ10) எனும் இரு உத்திகளும் சரவணனின் முகநூல் பக்கத்தில் எந்தப் பதிவிலும் காணப்படவில்லை.

## சமுதாயத்துக்குத் தகவல்கள் வழங்க சரவணன் கையாண்ட உத்திகள்

மக்களுக்குப் பெருந்தொற்றுக் குறித்த தகவல்களை வழங்க, சரவணன் இடர்காலத் தொடர்பாடல் உத்திகளை எப்படிக் கையாண்டுள்ளார் என்பதை விளக்குவதற்குத் தேர்ந்தெடுத்த ஒருசில பதிவுகள் மட்டுமே இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட உத்தியிலிருந்து குறைவாகப் பயன்படுத்தப்பட்ட உத்தி எனும் நிரலில் தரவுகள் விளக்கப்பட்டுள்ளன.

நாட்டில் தொற்றுநோய் கண்டிருக்கும்போது, மக்களின் பதற்றத்தைச் சமாளிக்க துல்லியமான தகவல்களை வழங்குவது முக்கியம் *(Sultan & Rapi, 2020).* மக்கள் என்ன செய்ய வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் என்பதைப் பற்றி மக்களுக்குப் புரியும் வகையில் எளிய முறையில் எடுத்துரைக்க வேண்டியது தலைவர்களின் கடமையாகும். அவ்வகையில் சரவணனின் பெரும்பாலான பதிவுகள், முதல் தொடர்பாடல் உத்தியின் பரிந்துரைக்கேற்ப மக்களின் அறிவாற்றலுக்குச் சவாலாக இல்லாத, இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய தெளிவான கட்டளைகளாகவே அமைந்திருந்தன.

எ.கா:

<table>
<tr><th>ப2</th><th>ப3</th><th>ப16</th></tr>
<tr>
<td>
</td>
<td>
</td>
<td>
</td>
</tr>
<tr><td>2020 **எப்ரல்** 4</td><td>2020 **எப்ரல்** 7</td><td>2020 **மே** 1</td></tr>
</table>

வழங்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டுகளில் ஊரடங்கின் பயனை அறிந்து வீட்டிலேயே இருங்கள், கோறனி என்பது தொற்று நோய் என அறிந்திடுங்கள், விலகி இருங்கள், வெளியில் செல்லாமல் வீட்டிலேயே இருங்கள் என மிக எளிமையான கட்டளைகளை வழங்கி, மக்கள் செய்ய வேண்டியவற்றையும் செய்யக் கூடாதவற்றையும் சுட்டியுள்ளார்.

மேலும் இப்பதிவுகளில் நான்காவது உத்தியில் சொல்லப்பட்டதுபோல், சரவணன் வெளிப்படையாகவும் நேர்மையுடனும் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். Petersen (2020), மிகைப்படுத்தாத அளவான நம்பிக்கையை ஊட்டும் வகையில், தலைவர்கள் நேர்மறையான, எதிர்மறையான கருத்துகளைத் துல்லியமாகச் சொல்வதன் வழி, மக்கள் நியாயமான எதிர்பார்ப்புகளை வளர்த்துக்கொள்ள உதவ வேண்டும் என்கிறார். இக்கூற்றுக்கேற்ப சரவணனும் அரசாங்கம் விதித்துள்ள நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணைக்கான காரணத்தை விளக்கியுள்ளார்; வீட்டில் முடங்காவிட்டால் தொற்று நோய் பற்றிக்கொள்ளும் என்றும் எச்சரிக்கின்றார். இடர் காலத்தில் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் பேசுவது எந்த அளவுக்கு முக்கியமோ அதே அளவுக்கு மக்களைப் பயமுறுத்தாமல் இருப்பதும் முக்கியம் *(Sandman & Lanard, 2020)*. ஆக, ப16-இல் "வரானா ஆளென்று கொரோனா காத்திருக்கும்! வராமல் வீட்டிலிரு வெளியேறிப் போயிருக்கும்!" எனும் கூற்றில் யாரும் வீட்டை விட்டு வெளியில் செல்லாவிட்டால், கொரோனா தானாகவே போய்விடும் என்கிறார். இக்கூற்றின் வழி மக்கள் பயம் கொள்ளத் தேவையில்லை என்பதை உணர்த்துகிறார்.

பல்லின மலேசியர்கள் பார்க்கக் கூடிய, சரவணனின் இந்த அதிகாரப்பூர்வ முகநூல் பக்கத்தில் தமிழ்மொழியில் பதிவேற்றியிருப்பது, இவை தமிழர்களை இலக்காகக் கொண்ட பதிவுகள் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன. ஒரே வகையான அடையாளத்தை, நம்பிக்கைகளை, பழக்க வழக்கங்களைக் கொண்ட தம் இனக் குழுவினரின் மீது அக்கறை கொள்வது மனித இயல்பு *(Cammett & Lieberman, 2020)*. சரவணனும் இக்கூற்றுக்கேற்ப, எட்டாவது தொடர்பாடல் உத்தியின் அடிப்படையில், தமிழர்கள் எல்லாம் ஒரே குழுவினர் எனும் உணர்வை ஏற்படுத்தி, எதிர்கொண்டுள்ள இடரைத் தவிர்க்க ஒன்றுபட்டுச் செயல்படத் தூண்டி, சமுதாயத்தின் வழக்கங்களை ஒழுங்குப்படுத்தும் முறைமைகளைச் சொல்லி, நோய்ப் பரவலைத் தடுக்க மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். அரசாங்கத்தின், குறிப்பாக மலேசியச் சுகாதார அமைச்சின் சார்பாக, கோறனித் தொற்றுக் குறித்த தகவல்களைச் சிறுபான்மை இனத்தவரான தமிழர்களுக்கு, அவர்களின் தாய்மொழியிலேயே வழங்கியுள்ளார். தகவல்களைச் சமுதாய வழமைகளோடு பொருத்தி வழங்குவதால், மக்கள் அவர்களுக்கு நெருக்கமானவர்கள் மீது அக்கறைகொண்டு நோய் பரவுவதற்குத் தாம் காரணியாகாமல் இருப்பதை உறுதிசெய்ய ஊக்குவிக்கலாம் (Everett et al., 2020). சமுதாய வழமையை வேண்டுதல் எனும் ஏழாவது தொடர்பாடலின் இத்தன்மைகள் பின்வரும் எடுத்துக்காட்டுகளில் வெளிப்பட்டிருப்பதைக் காணலாம். ப1-இல்,

இடம்பெற்றுள்ள "உங்களின் குடும்பத்தினரின் பாதுகாப்பை உறுதி செய்ய வீட்டிலேயே இருங்கள்" என்ற கூற்றின் வழி அவரவருக்கு நெருக்கமானவரின் உடல்நலத்திற்கு அவரவரே பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

<table>
<tr>
<td>ப1<br>
<br>2020 மார்ச்சு 31</td>
<td>ப6<br>
<br>2020 எப்ரல் 11</td>
<td>ப8<br>
<br>2020 ஏப்ரல் 19</td>
</tr>
</table>

உடல்நலம் பற்றிய தகவல்களை ஒருவரால் எந்த அளவுக்குக் கிரகிக்க முடியும் என்பது அவரிடமுள்ள உடல்நலம் குறித்த எண்ணெழுத்தறிவின் அளவைப் பொருத்தது (Rudd & Baur, 2020). எனவே, தகவல்களைப் பரப்ப முனையும் தலைவர்கள், மக்களிடையே உள்ள எண்ணெழுத்தறிவு அளவின் வேறுபாடுகளை எண்ணி, அதற்கேற்ப தகவல்களை வழங்க வேண்டும். அதோடு, வழங்கப்படும் தகவல்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தக் கூடியவையாக இருந்தால், மக்கள அவற்றைச் செயல்படுத்த முடிவெடுப்பர். அதுமட்டுமல்லாமல் ஒரு செயலின் விளைவையும் விளக்குவதால், மக்கள் அதன் ஆபத்தை அறிந்து துலங்குவர். ப6-இல் "இந்தத் தொற்று நோய்க்கு மருந்தில்லை, சற்றே விலகி இருப்பவரை - நோய் பற்ற வழியில்லை" எனும் கூற்றின் வழி சரவணன் கோறனி நோயின் தொற்றும் தன்மையை விளக்குவதோடு, அதிலிருந்து தற்காத்துக்கொள்ள மக்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆறாவது தொடர்பாடல் உத்தியின் பரிந்துரைக்கேற்ப, எளிய நடைமுறையையும் எடுத்துரைக்கிறார்.

நடத்தையிலும் செயலிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குத் துணைசெய்யும் பொருத்தமான நடவடிக்கைகளையும் சரவணன் தன் தொடர்பாடலில் இணைந்துள்ளார். இந்த ஏழாவது தொடர்பாடல் உத்தியில்,

ஒருவர் சொல்ல விழையும் தகவல்களை நம்பிகையூட்டும் வகையில் கட்டமைத்து, சமூகத்திற்கு ஒற்றுமையின் வலிமையை உணர்த்தி, அவர்களைச் செயல்படத் தூண்ட வேண்டும். நெருக்கடியான காலக்கட்டத்தில் பெருந்தொற்றுத் தொடர்பான ஆணைகளை நடைமுறைப்படுத்தவும் மக்களின் உடல்நலப் பாதிப்புக்கான ஆபத்தைக் குறைக்கவும் கூட்டுணர்வை மேம்படுத்தி, சமூக ஒற்றுமையை உருவாக்குவது முக்கியம் *(Mishra & Rath, 2020; Sultan & Rapi, 2020).* ப6-இல் "ஊர் ஒன்றுபட்டால் கொரோனாவுக்குக் கொண்டாட்டம்" எனும் கூற்றின் வழி, சரவணன் அனைவரும் ஒன்றுபட்டு விலகியிருக்க வேண்டும் என்று மக்களைச் செயல்படத் தூண்டுகிறார். இன்றைய இந்த இக்கட்டான காலச் சூழலை மாற்றி அமைக்கும் ஆற்றல் மக்களிடம் உள்ளது என்பதை நினைவுப்படுத்தி, மக்களை ஒன்றுபட்டு இயங்கச் சொல்கிறார்.

தலைவர்கள் பரிவுடன் தொடர்பாடும்பொழுது வெளிப்படும் இரக்கம், மக்களுக்குத் தலைவர்கள் மீதுள்ள நம்பிக்கையை வளர்க்கும் *(Reynolds & Quinn, 2008).* மேலும், மக்களை மதித்து அவர்கள் மீது நம்பிக்கை வைத்து பேசுவதாலும், தலைவர்களால் மக்களின் ஆதரவைப் பெற முடியும் *(Leask & Hooker, 2020).* சரவணனின் தொடர்பாடலில் பரிவுடன் தொடர்பு கொள்ளுதல் எனும் உத்தியை, "நண்பா" (ப2, ப5), "உடன்பிறப்பே" (ப14) போன்ற சொல்லாட்சிகளால் அறியலாம். தாம் மக்களுக்கு நெருக்கமானவர் என்று வெளிப்படுத்தி, அவர்கள் துன்பத்தைத் தாமும் அறிந்துள்ளதாகக் காட்டி, மக்களை வீட்டிலேயே இருக்கும்படி அன்புக் கட்டளை இடுகிறார். அரசியல்வாதிகள் மக்களின் நலனில் அக்கறைகொண்டுள்ளதாகக் காட்டும் பொழுது, மக்கள் அவர்களின் கட்டளைகளுக்கு இணங்குகின்றனர் *(Pfattheicher et al., 2020).*

முதல் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை விதிக்கப்பட்ட பொழுது, பெரும்பாலான மலேசியர்கள் பெருந்தொற்றை முறியடிக்க தயாராக இருந்தனர்; ஒருசிலர் செய்வதறியாது இருந்தனர் *(Azlan et al., 2020).* இத்தகைய நிலையற்ற சூழலில், அச்சூழலை விளக்கி, அதை எதிர்கொள்ள மக்கள் உடல் உள அளவில் தயாராவதற்குத் தலைவர்கள் உதவ வேண்டும் *(Hyland-Wood et al., 2021).* "சூரியனையும் சந்திரனையும் அணுஅணுவாக ஆராய்ச்சி செய்த மனித இனம் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டு இருக்கின்றது" (ப1), "தடுப்பூசி உருவாக நாளாகலாம்" (ப15) போன்ற கூற்றுகள் இன்றைய நிலையற்ற தன்மையை உணர்த்துகின்றன. சரவணன், ஐந்தாவது தொடர்பாடல் உத்தியின் அடிப்படையில், நிலையற்ற தன்மையை ஏற்று, மக்களுக்கு உண்மை

நிலவரத்தைச் சொல்லி, இந்த இடர்காலத்தை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்தியுள்ளார்.

புதிய நடைமுறை காரணமாக ஏற்படும் மாற்றங்களை எளிதாக்குவதற்குப் பண்பாட்டு வேறுபாடுகள், மொழித் தடைகள், குறிப்பிட்ட சமூகங்களின் மாறுபட்ட தேவைகள் என்பனவற்றையும் சிந்தித்துத் தொடர்பாட வேண்டும். மாறுபட்ட சமூகத் தேவைகளை எண்ணிப் பார்த்தல் எனும் ஒன்பதாவது தொடர்பாடல் உத்தியைக் கையாள, சரவணன் தமிழ்ச் சமூகத்தின் நம்பிக்கையின் அடிப்படையில் கருத்துகளை வெளியிட்டுள்ளார். “விதி வழியே வருவதல்ல கொரோனா! வீதி வழியே திரிபவருக்கே கொரோனா!” (ப5), “நந்தி விலகியது நந்தனுக்கு நல்லது, நாம் விலகி இருப்பது யாவருக்கும் நல்லது” (ப7), “அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, அனைவரும் இருப்போம் வீட்டிலே அடங்கி” (ப10) எனும் கூற்றுகள் இதற்குச் சான்றாகின்றன. விதியை நம்பும் குழுவினரிடம், இது விதியால் வரும் நோயல்ல என்று வலியுறுத்துகிறார். சமய நம்பிக்கை உள்ளவர்களிடம் நாயன்மார் கதையையும் சிவபுராண வரியையும் எடுத்துரைத்து விலகியிருப்பதன் நன்மையையும், வீட்டிலிருப்பதன் அவசியத்தையும் விளக்கியுள்ளார்.

இதுவரையில், சரவணனால் பயன்படுத்தப்பட்ட *Hyland-Wood et al. (2021)*-இன் எட்டுத் தொடர்பாடல் உத்திகள் விவரிக்கப்பட்டன. எஞ்சிய கூடுதல் நம்பிக்கையைப் பெற முயலுதல் (உ2), போலித் தகவல்களை முறியடிக்க முன்முனைப்புடன் செயல்படுதல் (உ10) எனும் இரண்டு உத்திகள் சரவணனின் முகநூல் பக்கத் தமிழ்ப் பதிவுகளில் இடம்பெறவில்லை.

## முடிவுரை

சரவணனின் முகநூல் பக்கத்தில், கோறணி தொடர்பான தமிழ்ப் பதிவுகள் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும், ஒவ்வொரு பதிவிலும் பல்வகை உத்திகளைக் கையாண்டு, விளைபயன்மிக்க வகையில் தொடர்பாடியிருக்கிறார். மேலும், அரசாங்கம், சுகாதார அமைச்சு ஆகியனவற்றின் தகவல்களையும் கொள்கைகளையும் சரவணன், முகநூலில் தம்மைத் பின்தொடரும் தமிழர்களுக்கு ஆக்கப்பூர்வமாக வழங்கியுள்ளார் என்பது தெளிவாகிறது.

இருப்பினும், *Hyland-Wood et al. (2021)* பரிந்துரைத்த படி, பெருந்தொற்றால் நலிவுற்றிருக்கும் மக்களுக்குச் செய்த உதவி, முனைமுகப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டுதல் என்பனவும் சரவணனின் பதிவுகளில் இடம்பெறவில்லை. மேலும், மனிதவள அமைச்சராக இருப்பதால் சரவணன், குறைந்த வருமானம் கொண்ட குழுக்கள், மாற்றுத் திறனாளிகள், இந்திய மாணவர்கள் ஆகியோர் இந்த இடர்காலத்தில் எதிர்நோக்கும் சவால்களையும் அவர்களுக்கான தகவல்களையும் வழங்கியிருக்கலாம்.

இந்தக் கட்டுரையில் ஒரு தலைவரின் முகநூல் பதிவுகள் மட்டும்தான் ஆராயப்பட்டன. எதிர்வரும் காலங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்களின் சமூக ஊடகங்களின் பதிவுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்யலாம். குறிப்பாக, பெருந்தொற்றுக் காலங்களில் தலைவர்கள் மக்களுக்கு ஆற்றிய உரைகளின் மொழியியல் கூறுகளான மொழிநடை, சொற்தேர்வு, உடல்மொழி போன்றவற்றை ஆராயலாம்.

## REFERENCES


Aruma, E. O. (2018). Roles of communication in community development. *International Journal of Network and Communication Research*, *5*(1), 1-10.

Azlan, A. A., Hamzah, M. R., Sern, T. J., Ayub, S. H., & Mohamad, E. (2020). Public knowledge, attitudes and practices towards COVID-19: A cross-sectional study in Malaysia. *Plos one*, *15*(5), e0233668.

Cammett M., & Lieberman, E. (2020). Building solidarity: Challenges, options, and implications for COVID-19 responses. *COVID-19 Rapid Response Impact Initiative*. White Paper 4, Issued on March 30, Edmond J. Safra-Centre for Ethics, New York.

Elengoe, A. (2020). COVID-19 outbreak in Malaysia. *Osong Public Health and Research Perspectives*, *11*(3), 93.

Everett, J.A.C., Colombatto, C., Chituc, V., Brady, W.J., & Crockett, M. (2020). *The effectiveness of moral messages on public health behavioral intentions during the COVID-19 pandemic.* https://doi.org/10.31234/osf.io/9yqs8

Franz, D., Marsh, H. E., Chen, J. I., & Teo, A. R. (2019). Using Facebook for qualitative research: a brief primer. *Journal of medical Internet research*, *21*(8), e13544.

Hyland-Wood, B., Gardner, J., Leask, J., & Ecker, U. K. (2021). Toward effective government communication strategies in the era of COVID-19. *Humanities and Social Sciences Communications*, *8*(1), 1-11.

Leask J., & Hooker, C. (2020) How risk communication could have reduced controversy about school closures in Australia during the COVID-19 pandemic. *Public Health Res Practice 30*(2) https://doi.org/10.17061/phrp3022007

Mishra, C., & Rath, N. (2020). Social solidarity during a pandemic: Through and beyond Durkheimian Lens. *Social Sciences & Humanities Open*, *2*(1), 100079.

Moses, P. (2015). மட்டக்களப்பு மாவட்டத்தின் அரசியல் சமூக தொடர்பாடலில் வெகுஜன ஊடகங்களின் அபிவிருத்தி: ஓர் சமூகவியல் நோக்கு. *In Emerging Trends and Challenges in Multidisciplinary Research (5th international Symposium of the South Eastern University of Sri Lanka)*, SEUSL, Sri Lanka, 2015 pp. 278-285
http://ir.lib.seu.ac.lk/bitstream/handle/123456789/1291/35.pdf?sequence=3

Petersen MB (2020, March 9) The unpleasant truth is the best protection against the coronavirus. *Politiken*.https://pure.au.dk/portal/files/181464339/The_unpleasant_truth_is_the_best_protection_against_coronavirus_Michael_Bang_Petersen.pdf

Pfattheicher.S., Nockur, L., Böhm, R., Sassenrath, C., Petersen, M.B. (2020). *The emotional path to action: empathy promotes physical distancing and wearing face masks during the COVID-19 pandemic*. Preprint at PsyArXiv. https://doi.org/10.31234/osf.io/y2cg5

Reynolds, B., & Quinn, S. C. (2008) Effective communication during an influenza pandemic: the value of using a crisis and emergency risk communication framework. *Health Promot Practice 9*(4_suppl):13S–17S. https://doi.org/10.1177/1524839908325267

Rudd, R., & Baur, C. (2020). Health literacy and early insights during a pandemic. *Journal of Communication in Healthcare: Strategies, Media and Engagement in Global Health*. *13*(1), 13 – 16.

Sandman P, & Lanard J (2020) *COVID-19: The CIDRAP Viewpoint* (Center for Infectious Disease Research and Policy) [Research]. University of Minnesota. https://www.cidrap.umn.edu/sites/default/files/public/downloads/cidrap-covid19-viewpoint-part2.pdf

Stayner, T. (2020, March 26). As in-language communication about COVID-19 is harnessed to reach multicultural groups, advocates warn minority communities must not be forgotten. *SBS News*. https://www.sbs.com.au/news/australia-s-minority-communities-urgently-need-covid-19-resources

Subramani, R (2013).மொழியின் தோற்றமும் தொடர்பாடலின் வளர்ச்சியும். *அச்சுக்கூடம்: தொடர்பாடலுக்கான பன்னாட்டு ஆய்விதழ் (Achchukkuudam an International Research Journal of Communication)* 1(1), 68-79. http://achchukkuudam.thamizhagam.net/articles/pdf/The%20evaluation%20of%20language-Achchukkuudam%20Journal%20Thamizhagam%20Media.pdf

Sultan, S., & Rapi, M. (2020). Positive Discourse Analysis of the Indonesian Government Spokesperson’s Discursive Strategies during the Covid-19 Pandemic. *GEMA Online Journal of Language Studies*, *20*(4), Article 4. https://doi.org/10.17576/gema-2020-2004-14

Zappavigna, M. (2018). *Searchable talk: Hashtags and social media meta discourse*. London: Bloomsbury Publishing.